யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம்

நிகழ்நிலைப் பரீட்சை

ஆரம்பப்பிரிவு

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

முன்னோடிப் பரீட்சை - 03

நேரம் - 1 மணி 15 நிமிடம்

வினாத்தாள் - II

ஆக்கம்

திரு செ. வினோத்குமார்

யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உங்கள் **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உங்களது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன.
- விடைகள் எழுதப்பட வேண்டிய இடத்தில் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 30 தொடக்கம் 59 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	புள்ளி
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்த புள்ளிகள்	
☐ X $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள்	
சொற்களில்	

முதலாவது பரீட்சகர்	ஒப்பம்
புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்ட தென சான்றுப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன்	
கணித பரீட்சகர் மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன்	

www.kedu.lk

1) மனிதனும் ஓர் இயற்கை. இயற்கையோடு தொடர்புகொள்ளும் போது மனிதன் ஆற்றல் பெறுகின்றான். இயற்கையோடு இயைந்து வாழ்பவருக்கு இயற்கையானது அறிவாகவோ, ஆற்றலாகவோ, செல்வமாகவோ தன்னை வாரி வழங்குகின்றது. இயற்கையை நேசிப்பவர்களிடம் அன்பு மிகுதியாகும் உள்ளத்தில் அழகு பெருக்கெடுக்கும் ஆர்வம் துளிர்விடும் மகிழ்ச்சி பன்மடங்காகும் புதுமை புலப்படும் கற்பனை மிகும் கண்ணோட்டம் அழகுபெறும் மனம் ஆகாயமாக விரிவடையும்.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்க.**

1. மனிதன் எச் சந்தர்ப்பத்தில் ஆற்றல் பெறுகின்றான்?

.....

2. ''பழமை'' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.....

3. ''மனதில்'' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.....

4. இயற்கையோடு வாழ்பவருக்கு இயற்கை எவ்வாறு தன்னை வாரி வழங்குகின்றது?

.....

5. இயற்கையை நேசிப்பவர்களின் இயல்பு எவ்வாறு கூறப்படுகின்றது?

.....

6. இப் பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

    1. அறிவும் ஆற்றலும்
    2. இயற்கையும் மனிதனும்
    3. உள்ளத்தின் அழகு

2) உயர்திணை ஒருமை ஆண்பால் பெயர்ச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. வைத்தியர் 2. மாணவர் 3. ஆண்கள் 4. வானம் 5. சிறுவன்

3) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

- நுழைவுச்சீட்டை / பார்வையிடுவதற்கான / எனது / மிருகக்காட்சிச் சாலையை / பெற்றுக்கொண்டனர். / பெற்றோர்

.....

4) எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

- நம்பி :- .....

5) பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

♦ இளங்கன்று பயமறியாது .....

♦ இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை .....

6) பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. தண்டு, ஓலை, வேர், நகம் என்பன சினைப்பெயர்கள் ஆகும். ( )
2. அண்ணாவுடன் தம்பி பாடசாலைக்குச் சென்றனர். ( )
3. அவன், தம்பி உயர்திணை ஆண்பால் ஒருமைச் சொற்கள் ஆகும். ( )
4. தபுதாரன் என்பவன் திருமணம் செய்யாத ஆண் ஆவான். ( )

7) பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

1. என்ர தம்பி பாவக்காயை விரும்பி உண்பான்

.....

2. கையிலிருந்த சவுக்காரம் வழுக்கி கீழே விழுந்தது.

.....

8) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) அந்தி வானம் செந்நிறமாகக்.....

(காணப்பட்டது, கானப்பட்டது, காணப்பட்டன)

2) அணில்கள் மாமரத்தில்.....

(ஏறியது, ஏரியது, ஏறின)

9) பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக எழுதுக.

♦ நான் புல்லாங்குழலின் இசையைக் கேட்டேன்.

.....

10) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

♦ நீ இதை விரும்புகிறாயா


♦ சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள்தானே எனக் கேட்பான்


11)பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

♦ Spider :- ..... ♦ Pond :- .....

www.ikedu.lk

12)பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

1)  .....

2)  .....

13)பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

1. What / vegetable? / this / is :- .....
2. small / I / a / have / tail :- .....

14) "பதாதா" என்னும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக

உங்களுக்கு என்ன வேண்டும்? .....

16) "இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்று" எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17)

2	**7**
6	**0**


கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

.....

18) 35 421 என்னும் எண்ணைப் பயன்படுத்தி விடை எழுதுக.

1. இங்கு இலக்கம் "5" வகைகுறிக்கும் பெறுமானம் யாது? .....
2. "3" குறிக்கும் இடம் யாது? .....

19) கீழே தரப்பட்டுள்ள திண்மஉருவின் அடிப்படையில் வினாக்களுக்கு விடை எழுதுக.



1. இவ்வுருவின் உச்சிகளினதும் ஓரங்களினதும் கூட்டுத்தொகை யாது?

.....

2. இவ்வுருவின் முகங்களின் எண்ணிக்கை யாது?

.....

20) ....., ... 54, 66, 88 ..... இவ் எண்கோலத்தை பூர்த்தி செய்க.

www.lkedu.lk

21) இக் கூட்டல் சங்கிலியின் இடைவெளியில் வரவேண்டிய எண்களை எழுதுக.

56	+78	.....	+59	.....

22) புகையிரத நிலையம் ஒன்றில் ஒரு நாளில் 4497பேர் பிரவேசித்தனர். 2359பேர்வெளியேறினர். பிரவேசித்தோர் தொகைக்கும் வெளியேறியோர் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

.....

23) பிற்பகல் 5.25 என்பது டிஜிட்டல் நேரத்தில் எழுதப்படும் விதத்தை எழுதுக.


.....

24) 

இவ்வுருவில் $\frac{1}{2}$ பங்கை நிழற்றவேண்டும் எனில் இன்னும் எத்தனை பங்கிற்கு நிழற்றப்பட வேண்டும்? .....

25) ஒரு மாணவனுக்கு 4 அப்பியாசப் புத்தகங்கள் வீதம் பகிர்ந்தளிப்பதற்காகஒருபாடசாலைக்கு 804 அப்பியாசப் புத்தகங்கள் தேவைப்பட்டன. இப் பாடசாலையில் உள்ள மாணவர்கள் எத்தனை?

.....

26) 

கொழும்பில் இருந்து புத்தளம் சென்ற ஒருவர் மீண்டும் மங்கள எலிய சென்றார் எனின் அவர் பயணம் செய்த மொத்தத்தூரம் எவ்வளவு?

.....

27) ஒன்று ரூபாய் 20.00 வீதம் 1டசின் பென்சிலை வாங்கிய ஒருவர் அப்பணத்தைச் செலுத்தும் முறைகள் இரண்டினை எழுதுக.


1. ரூ ..... + ரூ..... + ரூ ..... + ரூ .....

1. ரூ .....+ ரூ .....+ ரூ .....+ ரூ.....+ ரூ .....

28) ஒரு பாத்திரத்தில் 5*l* 750*ml* நீர் உள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்காக மேலும் 6*l* 750*ml* நீர் இடவேண்டியுள்ளது. அப்பாத்திரம் கொள்ளும் நீரின் மொத்த அளவு யாது?

.....

29) மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் செல்லப்பிராணிகள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



1. கிளியை விரும்புவோரை விட மைனாவை விரும்புவோர் எத்தனைபேர் கூடுதலாக உள்ளனர்?

.....

2. பறவைகளை விரும்புவோர் எத்தனைபேர்?

.....

www.lkedu.lk

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30) தண்டின் மூலம் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம் எது?

1. பாகல் 2. மரவள்ளி 3. வற்றாளை

31) பொந்தினை வாழ்விடமாகக் கொள்ளாத பிராணி

1. மைனா 2. ஆந்தை 3. கருங்குருவி

32) இலங்கை நாட்டிற்கே உரித்தான நகருயிரி

1. கொம்பு ஓணான் 2. புலத்ஹயா 3. சருகுமான்

33) புரதம் மிகுந்த உணவுக்கூட்டத்தில் அடங்கியுள்ள உணவு எது?

1. ஆனைக்கொய்யா 2. சோயாஅவரை 3. கரட்

34) வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள உலக மரபுரிமை இடங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்ட இடங்கள் எத்தனை?

1. 2 2. 8 3. 4

35) நுளம்பின் மூலம் நோய்க்கிருமிகள் எமது உடலில் செல்வதால் ஏற்படும் நோய்

1. கழச்சல் 2. கொள்ளைநோய் 3. சிக்குன்குன்யா

36) பறக்கமுடியாத பறவை இனங்களை மாத்திரம் கொண்டுள்ள தொகுதி

1. கோழி, மயில் 2. கிவி, மயில் 3. தீக்கோழி, கிவி

37) அழகியசொர்க்கம், பாக்கிலிப்பால் ஆகியன முறையே இலங்கையின்

1. மீனினமும் பாலினமும் ஆகும்.
2. பறவையினமும் தாவரமும் ஆகும்.
3. மீனினமும் தாவரமும் ஆகும்.

38) தும்பியானது ஒரு

1. ஊன் உண்ணி ஆகும்.
2. அனைத்தும் உண்ணி ஆகும்.
3. இலையுண்ணி ஆகும்.

39) இலங்கைக்கு அதன் அமைவிட முக்கியத்துவம் காரணமாக வழங்கப்படும் பெயர்களில் ஒன்றல்லாதது

1. இந்து சமுத்திரத்தின் நித்திலம்
2. இந்து சமுத்திரத்தின் முத்து
3. சிலோன்

40) மள்புளுட்டா, சபன்கோழி, மரநாய்(கலவத்தன்) ஆகியவை

1. இலங்கையின் சின்னங்கள்
2. இலங்கையின் பறவையினங்கள்
3. இலங்கைக்கே உரித்தான பிராணிகள்

www.lkedu.lk

41) பனிக்கட்டி ஒன்றினை நீரில் இட்டு அவதானம் செய்கையில் காணமுடியாதது?

1. பனிக்கட்டி நீரில் மிதத்தல்
2. பனிக்கட்டி வெடித்துச் சிதறுதல்
3. பனிக்கட்டி நீரில் கரைதல்

42) தலதாமாளிகை எதன் காரணமாகப் பிரசித்தமானது?

1. புத்தரின் புனித தந்ததாதுவைப் பாதுகாத்துப் பேணுவதால்
2. சுவரோவிய வேலைப்பாடுகளால்
3. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளால்

43) நுரைச்சோலை, லக்ஸபான ஆகியன முறையே

1. ஞாயிற்றுக்கல மின் உற்பத்தி நிலையம், நீர்மின் உற்பத்தி நிலையம்
2. அனல்மின் நிலையம், நீர்மின் உற்பத்தி நிலையம்
3. நீர்மின் உற்பத்தி நிலையம், ஞாயிற்றுக்கல மின் உற்பத்தி நிலையம்

44) SLDA என்பது

1. இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான குறியீடு
2. இலங்கையின் தரமான பண்டங்கள் தொடர்பான குறியீடு
3. இலங்கையின் பற்பசைக்கு வழங்கப்படும் குறியீடு

45) இலங்கையின் பிரதானமான ஏற்றுமதிப் பயிர்

1. தேயிலை
2. தெங்கு
3. ஒர்க்கிட்


46) உடலுக்குப் பாதுகாப்புத் தரும் உணவுகள்


1. காபோவைதரேற்று, கொழுப்பு கொண்ட உணவுகள்
2. புரதம் அடங்கிய உணவுகள்
3. விற்றமின்கள், கனியுப்புகள் அடங்கிய உணவுகள்

47) உயிர்ச்சத்து " **A** " குறைபாட்டால் ஏற்படுவது

1. பசியின்மை
2. கண்பார்வை குறைவு
3. எலும்பு நோய்கள்

48) பொருள் தண்ணீரில் நனையாமல் பார்த்துக்கொள்ளவும் என்பதை உணர்த்தும் குறியீடு.

1. 
2. 
3. 


49)  இக்குறியீடு குறிப்பது

1. பாதுகாப்பான வேலி முன்னால்
2. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால்
3. பாதுகாப்புடைய புகையிரதக் கடவை முன்னால்


www.ikedu.lk

50) இலங்கையின் தேசியக் கொடியிலுள்ள குறியீடுகளில் ஒன்று

1. தர்மசக்கரம் 2. நெற்கதிர் 3. அரசமிலை

51)  இவ்வுருவில் உள்ள மின் இணைப்பு

1. ஒளிரும்
2. ஒளிராது
3. பிரகாசம் குறைவானது

52) 

இக் குறியீடு

1. பிரதான வீதி 2. பெருந்தெரு 3. அதிவேகப்பாதை

53) தீககாமின சித்திரா ஆகியோரின் புத்திரன்

1. தேவநம்பியதீஸன் 2. பண்டுகாபயன் 3. மகாசேனன்

54) ரூவான்வெலிசாயயைக் கட்டுவித்த மன்னன்

1. துட்டகைமுனு 2. பண்டுகாபயன் 3. தேவநம்பியதீஸன்

55) 1990 எனும் அவசர தொலைபேசி இலக்கம்

1. அவசர அம்புலன்ஸ் சேவை
2. தீயணைப்பு படைப் பிரிவு
3. சிறுவர் துஷ்பிரயோகம்

56) அச்சு ஊடகங்களில் ஒன்று

1. துண்டுப்பிரசுரங்கள் 2. மின்னஞ்சல் 3. திரைப்படங்கள்

57) இலங்கையின் பிரசித்தமான பௌத்த வணக்கஸ்தலங்களில் ஒன்று

1. சிகிரியா 2. தங்கக்கோயில் 3. திருக்கோணேஸ்வரம்

58)  இவ் உபகரணத்தின் பயன்பாடு

1. பலகையை அழுத்தமாகச் சீவுதல்
2. பலகைகளில் துளையிடல்
3. பலகைகளில் குழியிடல்

59) தாவரங்களின் இலைகளைப் பயன்படுத்திக் கூடமைக்காத பிராணி

1. முசிறு 2. தையல்குருவி 3. தூக்கணாங்குருவி

60) **இன்றைய உலகில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்கவேண்டிய தேவை விவசாயத்துறை சார்ந்த தொழில் புரிபவர்களின் கையிலே உள்ளது.** அந்தவகையில் **விவசாயத்தின் அவசியம்** பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

1. .....

2. .....

3. .....

www.lkedu.lk